நிறைவேற்று மனு எண். 13/2021 நாள்: 21.11.2025

ம.சா.1 திருமதி. பத்மாவதி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

4) நான் தாக்கல் செய்த அ.வ.எண்.63/2016–ல் குறிப்பிட்டுள்ள புல எண்.347 இ/48 என்றால் சரிதான். மேற்படி புல எண். 347 இ/48 புறம்போக்கு என்று கிராம நிர்வாக அலுவலர் அடங்கல் பதிவேட்டில் பதிவு செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும், நாங்கள் நத்தம் புறம்போக்கில் குடியிருக்கிறோம். 2–ஆம் எதிர்மனுதாரர் பூதலூர் தனிவட்டாட்சியர் அவர்களிடமிருந்து தகவல் பெறும் உரிமை சட்டத்தின்கீழ் பெறப்பட்ட தகவல் படி மேற்படி புல எண். 347 இ/48 பொதுப்பாதை என கிராம கணக்கில் உள்ளது என குறிப்பிட்டுள்ள விவரம் சரியா என்றால் சரிதான்.

5) நான் பொதுப்பாதையை ஆக்கிரமித்து வீடு கட்டிவைத்துக் கொண்டு எதிர்மனுதாரர்கள் புழங்குவதற்கு இடம் கொடுக்காமல் இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. கிராம பதிவேட்டின் படி நான் குடியிருக்கும் வீடு பொதுப்பாதைதான் என்பதை மறைத்து வழக்கிற்காக இல்லை என மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டிற்கு பட்டா வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் குடியிருக்கும் வீடு தற்போது வரை பொதுப்பாதை என்றாலும், அதைநான் ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு எதிர்மனுதாரர்கள் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவானது நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை.

S.d/ Padmavathi

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.11.21 18:36:56 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU